# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## இந்திய கடற்படைக் கப்பல் ஷர்தா கொழும்பு விஜயம்

சுகன்யா ரகத்தை சேர்ந்ததும் கரையோர ரோந்து பணிகளுக்கானதுமான இந்தியக் கடற்படைக் கப்பல் ஷர்தா 2026 ஜூன் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் ஐ.நா. பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இலங்கை இராணுவத்திற்காக இந்திய இராணுவத்திடமிருந்து பொருட்களை இடமாற்றம் செய்வதற்காகவும் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொள்கின்றது. இச்சாதனங்கள் 2026 ஜூன் 16 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் நடைபெறும் நிகழ்வொன்றில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளன.

2. இவ்விஜயத்தின்போது இக்கப்பலின் கட்டளைத் தளபதி கார்த்திக் சச்தேவா அவர்கள் மேற்கு கடற்பிராந்திய தளபதி ரியர் அட்மிரல் எஸ் ஜே குமார அவர்களை சந்திக்கும் அதேநேரம் கப்பல் சிப்பந்திகள் இலங்கை அதிகாரிகளை சந்திக்கவுள்ளதுடன் இலங்கை கடற்படையினருடனான விளையாட்டு நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளனர்.

3. அதுமட்டுமல்லாமல் சர்வதேச யோகா தினத்தை குறிக்கும் முகமாக யோகா மூலமாக உடல் மற்றும் மனம் ஆகியவற்றுக்குகிடைக்கும் நன்மைகள் மற்றும் ஆன்மீக நல்வாழ்வு போன்றவற்றை காண்பிக்கும் முகமாக இலங்கை கடற்படையினருக்கும் குறித்த கப்பலின் சிப்பந்திகளுக்கும் இடையிலான கூட்டு யோகா அமர்வொன்றும் நடைபெறவுள்ளது.

4. இலங்கைக்கு இந்தியக் கடற்படைக் கப்பல்கள் மேற்கொள்ளும் விஜயங்கள், இரு நட்பு நாடுகளினதும் கடற்படைகளுக்கும் இடையிலான வலுவான பிணைப்பை மேலும் வலுப்படுத்தும் இலக்கை கொண்டவை. இது இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் என்ற கொள்கைக்கும், மாண்புமிகு பிரதமரின் 'பிராந்தியங்கள் முழுவதுக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பரஸ்பர மற்றும் முழுமையான முன்னேற்றம் (மகாசாகர்)' என்ற தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்.

*****

**கொழும்பு**
**09 ஜூன் 2026**